தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 கும்பம் (15-2-90) ஓர் உருபா (இதழ் எண்: 134)

தமிழீழப் போராளிகள் சண்டை நிறுத்தக் கோரிக்கை பயன்தராது!

ஏனெனில் கருத்து வேறுபாடுகள் உள்ள குழுக்கள் என்றுமே தாங்களாகச் சண்டையை நிறுத்திக் கொள்வதற்கு வாய்ப்பே இல்லை!

தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஒன்று சேருமா?

பேச்சுரை, பேச்சுரை என்றே அரசு நெடுங்காலம் கடத்தி விட்டது! தமிழீழம் ஒன்றே நோக்கம்! ஆக்கமான முறையில் இந்திய, மாநில அரசுகள் முடிவெடுப்பதே தீர்வுக்கு வகுக்கும்!

தமிழீழச் சிக்கல் தொடர்பாகக் கடந்த மாதம், தமிழக முதல்வர், கலைஞர் கருணாநிதி அவர்கள், விடுதலைப் புலிகளின் அரசியல் கருத்தாளர் பாலசிங்கம் முதலியோர்களிடமும், அங்குள்ள பிற போராளிக் குழுக்களுடனும், தமிழீழச் சிக்கலில் ஈடுபாடுடைய பிற அறிஞர்கள் சிலருடனும், பேச்சுரை நடத்தியுள்ளளார். ஆனால் 'ஊரே கூடித் தள்ளினாலும் ஓரடியும் நகராத தேர்' போலத் தமிழீழச் சிக்கல் இருந்தபடியேதான் இருக்கிறதென்றே நாம் மதிப்பிட வேண்டும்.

பேச்சுரை பேச்சுரை என்று திம்புப் பேச்சுகளிலிருந்து இதுவரை பத்துப் பன்னிரண்டு பேச்சுரைகள் விடுதலைப் போராளிகளுடன் இந்திய அரசும் பிற தலைவர்களும் தூதர்களும் நடத்தி விட்டனர். இதனால் நெடுங்காலம் சென்றதுதான் மிச்சம். ஆனால் இன்னமும் ஆள் மாறி ஆள் மாறி பேச்சு நடத்திக் கொண்டிருப்பது, இச் சிக்கல் மேலும் மேலும் பல துணைச்சிக்கலை விரித்துக் கொண்டே போவதற்குத்தான் பயன்படுகிறதே தவிர, சிக்கலும் தீர்ந்தபாடில்லை; சிணுக்கும் அறுந்த பாடில்லை.

இராசீவைப் பொறுத்தவரை அவரிடம் ஒரு கருத்து தெளிவாக இருந்தது அனைவருக்குமே தெரியும். அதுதான் தமிழர்களுக்கென்று தமிழீழத்-

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

விடுதலை விரும்பிக்குத் தந்தை விடுத்த விடை!

மடல் : 4 (முன்னிதழ்த் தொடர்ச்சி)

நான் எப்பொழுது உன் கைகளில் அச்சகத்தின் (அச்சகமா அது. படைக்களம்! அதன்) திறவைக் கொடுத்து, அன்றைய பணிக்குத் தேவையான தாள்கள் வாங்கிக் கொடுக்க வேண்டிய தொகையைத் தந்து, வழக்கம் போல உன்னை அனுப்பவும், நீ அவற்றை முருகேசன் கைகளில், (எந்தக் காரணத்தினாலாவது இருக்கட்டும்) கொடுத்துவிட்டுத் திருச்சிக்கு, என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் (உன்னால் 'முடியும்' என்பது போல்) தொடர் வண்டி ஏறிப் போனாயோ, அப்பொழுதே உனக்கு நான் தந்த 'தென்மொழியன்பன்' 'தென்மொழித் தொண்டன்' என்னும் பெருமைக்கு உரியவன் ஆகாய் என்பதைப் புலப்படுத்தி விட்டாய்.

என்றோ ஒருநாள் மட்டும், அல்லது ஒரு காலக் கட்டத்தில் மட்டும், அல்லது ஒரு நோக்கத்திற்கு மட்டும், அல்லது ஒரு தேவைக்கு மட்டும், அல்லது வேறு வழியில்லாமல், அப்படி ஒரு சூழலுக்கு ஆளாகித் தென்மொழியைப் படிக்கவோ, அல்லது விற்கவோ, அல்லது பரப்பவோ ஒரு வகையான முயற்சி—அல்லது செயல்—செய்து விடுவது என்பதே தென்மொழித் தொண்டு ஆகி விடாது.

அல்லது, 'நான் தென்மொழி என்னும் நிறுவனத்திற்கு உழைத்தேன்; உழைப்பேன்; ஆனால் உங்களுக்குத் தனிப்பட்ட ஒருவர்க்கு—அன்று—' என்று—என்னையும் தென்மொழியையும் வேறு படப் பிரித்துப் பேசித் தூய என் மன உணர்வில் கொள்ளிக் கட்டையால் சுட்டுச் சூடு போட்டு விட்டுப் போனானே, உன் அண்ணன்—அவனது ஓராண்டுச் சம்பளத்திற்கான உழைப்பும் தென்மொழித் தொண்டு ஆகி விடாது.

"நான் வேறு; தென்மொழி வேறும். நானில்லாமல் தென்மொழியாம். தென்மொழியில்லாமல் நானும்."—இவ்வாறு யார் சொல்வது உன் அண்ணன். என் குருதியில், என் உணர்வில், என் உழைப்பில் உருவாகிக் கல்வி கற்று, ஓர் ஆளாகத் தகுதியுள்ள ஒருவனாக 'உலாவரும்' என் மகனென்று சொல்லப் பெறுபவன் சொல்கிறான்! இவன் எப்படித் தென்மொழித் தொண்டனாவன். குயிலின் குரல்வளையைக் கடித்துத் துப்பியவன் எவ்வாறு அதன் அன்பனாகவோ அஃதாவது தென்மொழி அன்பனாகவோ அல்லது தொண்டனாகவோ—அல்லது அதன் மகனாகவோ தான் இருக்க முடியும்?—என்று எண்ணிப் பார்!

இப்படி எண்ணுவதற்கும் ஒரு தகுதி உனக்கு உள்ளதாக நான் கருதினால், அது நீ ஒரு தென்மொழித் தொண்டன் என்று அன்று, அல்லது நீ என் மகன் என்பதற்காகவும் அன்று, 'நீ ஒரு விடுதலை உணர்வு முகிழ்த்துள்ள ஒரு வீரன்' என்பதற்காகவே ஆகும்.

பொழில்!

இம் மடல் ஒரே மூச்சில், ஒரே வேளையில் ஒரே நாளில் எழுதப் பெறுவது அன்று. இத்துடன்—இன்றுடன்—மூன்று நாள்களாக—இடையிடையில்—அச்சகப் பணிகளும்—இதழ்ப் பணிகளும்—அன்பர்கள்—நம் குடும்பத்தினர் ஈடுபாடுகளுமாக—நடந்து கொண்டிருக்கையிலே—அவற்றிலும் ஈடுபட்டுக் கொண்டு—மனம் சிதையாமல்—உணர்வு கலையாமல்—ஆனால் உணர்வு வயப்படாமல்—சினத்தாலோ எரிச்சலாலோ கட்டுப்பட்டு விடாமல்-அறிவுத் தெளிவுடன் எழுதப் பெறுவது ஆகும். இதில் உள்ள உணர்வு வரிகள் என் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழுகின்ற உண்மைகளாகும்.

இது வரை நான் இத்தொண்டின் பொருட்டாகச் சந்தித்த பல்லாயிரக் கணக்கானவர்களுடன் பேசியும், வழக்காடியும், என் கொள்கையாக உண்மையாக நான் கண்டு ஆராய்ந்து தேறிய முடிவுகளுக்காகப் போராடியும், பெரும் பொருள் செலவிட்டும், சோர்ந்து போன உள்ளத்துடன் ஆனால் தெளிவான-மிகத் தெளிவான—உள்ளுணர்வுடன் எழுதுவதாகும் இம் மடல். அதுவும் உன் பொருட்டாக, உனக்காவது சொல்லி ஆறுதல் அடையும் பொருட்டாக-எழுதப் பெறுவது ஆகும். மேலும் இஃதொரு வரலாற்று மடலும் ஆகும். எனவேதான் இத்துணை விரிவாகவும் விளக்கமாகவும் எழுத நேர்ந்தது. எனவே பொறுமையாகப் படி; அமைவாகப் படி; நிறுத்தி நிறுத்திப் படி. அப்படித்தான் நீயும் படிப்பாய் என்று நம்புகிறேன். இதில் உள்ள ஒரு சிறு வரியையும், எழுத்தையும், உணர்வையும் புறக்கணித்தாற்போல் படித்து விடாதே! மீண்டும் மீண்டும் படி!

இனி, இம்மடல் இன்னும் சில விளக்கங்களைக் கூறி முடிவுறும் என்று கருதுகின்றேன்.

அடுத்து, உன் மடலில்,

"அத் தென்மொழி அன்பர் கூட்டம் என்பதும், அத்தகைய உயிர் ஈகை செய்யும் தொண்டர் கூட்டம் என்பதும், மொழி என்ற கண்ணோட்டத்திலும், பொதுவான இன விடுதலைக் கண்ணோட்டத்திலும் சேர்ந்தன. அதை அறிவு அளவில் நாம் வளர்க்கவும் இல்லை. 'தாங்கள் குறிப்பிட்டதுபோல் தென்மொழி ஒரு நாற்றங்கால் நிலமாகத்தான் இருந்தது. அது பயிரை விளைவிக்கிற நிலமாக இல்லை'-என்கிற குறையும் அதில் அடங்கியுள்ளது.

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திலோ, தமிழகத்திலோ, அல்லது வேறு எங்கோ ஒரு தனி நாடு அமைந்து விடக் கூடாது என்பது. ஆனால், அக் கொள்கையை அவர் தெளிவாகக் கூற முடியாமல், மறைமுகமாக, இந்திய அமைதிப் படை என்ற பெயரால், ஈழத்தில் தமிழர்களைக் குறிப்பாகப் போராளிகளை, இன்னும் குறிப்பாக, தமிழீழக் கோரிக்கையில் மிகவும் உறுதியாகவும் இறுதியாகவும் வலிந்து நிற்கும் விடுதலைப் புலிகளை அழித்தொழித்து, தமிழீழக் கோரிக்கையின் வலிவைக் குறைக்கவே இறுதிவரை வேலை செய்தார்.

அந்தக் காலகட்டத்திலெல்லாம் தமிழக முதல்வர் அவரின் கரவான நடவடிக்கைகளைப் பற்றியோ, தமிழ் மக்கள் அழிந்து படுவதைப் பற்றியோ, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தம் கருத்தைப் பளிச்சென்று மக்கள் முன்னோ இராசீவின் முன்னோ வைக்காமல் மழுப்பலாகவே, அரசியல் தந்திரத்துடன், வழ வழா, கொழ கொழா என்றே, மிக மிக மேலோட்டமாகக் கருத்தறிவித்து வந்தார். அது, அன்றைய சூழ்நிலையில் வலிவற்ற அவரின் அரசியல் பின்னணிக்கு உகந்ததாகவே இருந்ததென்று, அவரும் அவரைச் சார்ந்தவர்களும் கூறிக் கொண்டனர்.

ஆனால், அதிகாரம் கைக்கு வந்து, நடுவணரசிலும் தமக்கு ஒரு வாய்ப்பான, ஆதரவான சூழ்நிலை அமைந்தவுடன், 'கொண்ணை வாயனுக்குக் கொழுக்கட்டை கிடைத்ததைப் போல,' கலைஞர் கைகளில் தேசிய முன்னணி அரசின் தலைவர் வி. பி. சிங், இச் சிக்கலை ஒப்படைத்தார். தமக்குக் கிடைத்த அதிகார ஏற்றத்தால், கலைஞர் இப்பொழுது, தமிழீழப் போராளிக் குழுக்களிடம் பேசிவிட்டு, ஞாயம் பேசுகின்ற வகையில், '**உடன் பிறப்புப் போரை நிறுத்துங்கள்**' என்று பேசுகிறார். திருச்சி மாநாட்டில் தீர்மானமும் போட்டிருக்கிறார்! (அவர் திருவாயால் கூறிய உரை' "**சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள்**" என்பது.—சகோதர யுத்தம் என்று சமசுக்கிருதத்தில் கூறினால்தான் அவர் குரலின் 'ஒலி' கணீரென்று ஒலிக்கும் என்பது அவர் கருத்துப் போலும்! இனி, அவர் இதே பாணியில் அவைத் தலைவரைச் 'சபாநாயகர்' என்றும், தலைவரை 'அக்கிராசனர்' என்றும் ஒலிக்கலாமே! அதிகாரம் தலைக்கு ஏற ஏற அடிப்படைக் கொள்கைகள் அவருக்கு மறந்து விடும் போலும்!)

நம்மைப் பொறுத்தவரை, ஓர் இனப் போராட்டத்திற்கு இத்தகைய நரித்தந்திர ஞாய முடிவுகள் பொருந்தா. தமிழீழத்தில் நடைபெறுவது பங்காளிகள் சண்டையில்லை. இனப்போர்! தமிழீழ விடுதலைப் போர்! 'அதை 'ஞாயம்' பேசியோ, ஒப்புரவு பேசியோ, மூனைமழுக்கி முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்; அதன் வழி தமக்கு ஒரு 'நல்ல' பெயர் கிடைக்க வேண்டும்;—என்னும் கருத்தெல்லாம், கலைஞரின் அரசியல் 'பாணி'க்கு உகந்ததாக இருக்கலாம்; பெருமையாகவும் இருக்கலாம். ஆனால் தமிழினத்துக்கு அது நல்லதன்று! தமிழீழச் சிக்கலுக்கும் அது தீர்வன்று! தமிழீழப் புலிகளின் தீர்வே தமிழினத்திற்கு ஏற்ற நல்ல தீர்வு! பிரபாகரன் முடிவுதான் தமிழீழத்திற்கு மட்டுமன்று, தமிழினத்துக்கே உகந்தது. **தமிழர்களுக்கென்று ஒரு தனி நாடு அமைந்தே ஆக வேண்டும் என்பதுதான் முடிவான கொள்கை! அதில் இம்மி** குறைந்தாலும் அது தூய நெய்யில் எண்ணெயைக் கலப்பதைப் போல, சிறப்புக் குன்றிப் போகும்! தயிரில் தண்ணீர் கலப்பதைப் போல நீர்த்துப் போகும்! கன்னெயில் மண்ணெய் கலப்பதைப் போல் ஆற்றல் குன்றிப் போகும்! பிரபாகரனும், பத்பநாபாவும், வரதராசபெருமாளும் பிற போராட்டக் குழுத் தலைவர்களும் ஒரே தரத்தினர் அல்லர். பிரபாகரன் மாவீரன்! பிற குழுக்களின் தலைவர்கள் வீரர்களாக இருக்கலாம்! இப்பொழுதுள்ள நிலையில் தமிழினத்தின் அடிமைத்தனத்தை மீட்டெடுத்துத் தமிழர்களுக்கென்று ஒரு தனி நாட்டை உருவாக்க, பிரபாகரனைப் போன்ற மாவீரனே தேவை மற்றபடி, மற்ற குழுக்களின் தலைவர்களைப் போன்ற வீரர்களோ கலைஞரைப் போன்ற அரசியல் தலைவர்களோ அல்லர். நாம் எதிர்பார்க்க வேண்டுவது வெறும் அரசியல் உரிமைகள் மட்டுமல்ல; ஆளுகின்ற உரிமையே ஆகும்!

கருத்து வேறுபாடுகள் உள்ள குழுக்கள் என்றுமே தாங்களாகவே சண்டையை நிறுத்திக் கொள்ள வாய்ப்பே இல்லை. இப்பொழுதைய நிலையில் ஒன்றுபடுவதற்கும் கூட வாய்ப்புகள் குறைவே! காரணம் போராளிக் குழுக்களின் ஒவ்வொரு தலைவரும் தாமே தமிழீழ விடிவுக்குக்காரணமானவராக இருக்கவேண்டும் என்றெண்ணும்பேராசைதான்! இங்கு தி.மு.க., அ.தி.மு.க.வுடன் ஒன்று சேருமா? அது முடியாது என்பதற்கு என்ன ஞாயமோ, அந்த ஞாயம்தான் அவர்களுக்கும்!

வரலாற்றை யாரும் உருவாக்க முடியாது. வரலாறு தான் ஒரு மாவீரனை உருவாக்க வேண்டும்! பிரபாகரன் உண்மையிலேயே வரலாற்றால் உருவாக்கப் பெற்ற தலைவன்! அவனை அரசியல் குப்பை மேட்டுக்கு யாரும் இழுத்து வந்துவிட முடியாது! போர்க்களந்தான் அவன் பிறப்பிடம்! போர்க்களந்தான் அவன் இறப்பிடமாகவும் இருக்க முடியும்!

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

அனைவரும் ஒன்று கூடுவோம்! நின்று பேசுவோம்! வென்று காட்டுவோம்!

தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாடு!

25-2-90; ஞாயிறு சென்னை-பெரியார் திடல்! எல்லாரும் வருக! ஏற்றங்கள் தருக!

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனால்தான் நம் இதழுக்குப் புதுப்புது அன்பர்கள் வந்து கொண்டே உள்ளனர்; பழையவர் கழன்று கொண்டே உள்ளனர்.

இவை யாவும் தாங்கள் ஆய்வு செய்யாததாக இருக்க முடியாது; தங்களை வெறுமனே தந்தை என்பதாக நான் எண்ணவில்லை; அப்படி 'அப்பா' என்று விளித்து எழுதுவதில் கூட ஏதோ அயன்மைப்பட்டுப் போய் விட்டதாக ஓர் உணர்வு என்னுள் உள்ளது. தங்களை எம் ஆசானாக, எம் தலைமைக் குருவாகவே எண்ணித் தொழுகிறேன். அத்தகைய உரிமையிலேயே, ஒரு கடைநிலைத் தொண்டனுக்கு உரிய நிலையில் இருந்து இக் கருத்தை அறிவிக்கிறேன்"—என்று எழுதியுள்ளாய்.

பொழில்!

அன்பர், தொண்டர் என்னும் சொற்களுக்கு நீ காணும் எளிய பொருள்களை நானும் காண மாட்டேன் என்பது உனக்குத் தெரியும் என்று கருதுகின்றேன். ஆனாலும் அந்தச் சொற்களைப் பயன்படுத்தித்தான் அவர்களை உன்னால் சுட்ட முடியும். ஆனால் அவற்றின் உண்மைப் பொருள்களை நான் நன்கு அறிந்திருப்பதாலும், அப் பெயர்களால் நீ சுட்டும் கூட்டத்தையும் நான் நன்கு தேறியிருப்பதாலும், நான் அத்துணை எளிதாக அக் கூட்டத்தினரை அச்சொற்களால் மதிப்பிட்டுக் கூறி விட முடியாது. இருப்பினும் உன் பாங்கிலேயே நின்று உன் கூற்றுக்கு விளக்கம் கூற விரும்புகிறேன்.

அன்பு மகனே!

'அக் கூட்டத்தை அறிவால் வளர்க்கவில்லை' என்று நீ குறைப்பட்டுக் கொள்கிறாய்! அப்படி நீ சுட்டும் அறிவுணர்வு ஏது' என்று என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. எந்த அறிவை நீ குறிப்பிடுகிறாய்? மொழி, இன, நாட்டு வரலாற்றறிவென்றால் உன் முடிவு தவறானது. செயலறிவு என்றால் உன் விரைவு தவறானது. இரண்டு நிலையிலும் என் முடிவு தவறானதென்றால், நான் அவர்களுடன் பழகிய உலகியலறிவைக் குறிப்பிடுகிறாயோ என்று நினைக்கத் தோன்றுகிறது. இவ் வுலகியலறிவை எப்பொழுதும் உலகியல் காரணங்களுக்காகவே நான் மதிக்கின்றேனே தவிர, நாம் போராட எடுத்துக் கொண்ட கொள்கை நிலையில் என்றுமே மதித்ததில்லை. ஏனெனில் உலகியலறிவு உண்மையற்றது; பொய்யானது; சூழ்ச்சியானது; ஏமாற்றும் உணர்வினது; இடத்திற்கிடம் ஆளுக்கு ஆள் மாறும் தன்மையது; பணத்தையும் பகட்டையுமே பெரிதாக மதிப்பது; நேர்மையைத் தவிர்ப்பது; உயர்ந்த உள்ளத்தைப் புறக்கணிப்பது; உண்மையை இகழ்வது—போன்ற பலப்பல தன்மைகளைக் கொண்டது. எனவே என்பால் நெருங்கியிருந்தவர்களுக்கு அவ் வுலகியலறிவை நான் புகட்டவும் இல்லை; புரிய வைக்கவும் இல்லை. மாறாக அவ்வறிவை நான் பாராட்டவும் இல்லை. போற்றிக் கொள்ளவும் இல்லை. எனவே வந்தவர்கள் தென்மொழியையும் என்னையும் விட்டுப் போயிருக்கலாம்; வராதவர்கள் அந்த நாட்டம் கொண்டு வர விரும்பி வந்தும் இருக்கலாம். ஆனால், இரு தரப்பினர்க்கும் 'நம் கொள்கையின் மேல் ஒரு பிடிப்பும், உயிர்த் துடிப்பும் உண்மையிலேயே இருந்திருக்குமானால், அவர்கள் இங்கிருந்து நகர்ந்திருக்கவே மாட்டார்கள். ஏனெனில் தென்மொழி உயிர்ப்பிடமாகிய இந்தக் களத்தைவிட, வேறு உயிர்ப்பும் உண்மையும் அற்ற எந்தக் களத்திற்கும் போய், அவர்கள் இந்தக் கொள்கையின் வெற்றியைத் தேடி அலையமாட்டார்கள். அவர்கள் இந்நாட்டில் எந்த இடத்திலும் மன அமைதி கூடப் பெற முடியாது. அவர்களுடைய பொதுவுணர்வு உண்மையாக இருக்குமானால், என் பொதுவுணர்வு அவர்களுக்கு நிறைவைத் தராமல் இருக்கவே முடியாது. என் தனிப்பட்ட சில உணர்வுத் தாக்கங்கள் (தனிநல உணர்வுகள் அல்ல) அவர்களுக்கு விருப்பமற்றனவாகவோ அல்லது வெறுப்பூட்டுவனவாகவோ இருந்திருக்கலாம். ஏனெனில் அவை உலகியலுடன் சிக்கிச் சிதைந்து அதனின்று என்னைத் தனியழித்துக் கொள்ளாத நிலையில் வெளிப் படுபவை. அவற்றின் பொருட்டு அவர்கள் என்னை விட்டு நீ கூறுகின்ற சொற்களால், கழன்று கொண்டு சென்றனர் என்றால், வண்டியை வைத்து, வண்டிச் சரக்கை மதியாமற் போனவர்களாகி விடுவார்கள்; சிப்பியை வைத்து முத்தை மதிப்பிடத் தெரியாதவர்களாகி விடுவார்கள், இப்படிப் பட்டவர்கள் என் பால் வந்தும் ஒன்றுதான்? வராமல் இருந்தும் ஒன்று தான். ஆனால், என்றும் அவர்கள் நிலையில் இருந்து கொண்டே அஃதாவது அவர்கள் எதிர் பார்த்த உலகியல் சுழற்சிக்குள்ளேயே—இருக்க வேண்டியதுதான். மற்றபடி இக் கொள்கை வெற்றி பெறப் போகும்போது அதன் வெற்றி வட்டத்திற்குள் என்றுமே வர முடியாது. அவர்கள் உலகியல் சுழற்சியில் நலிந்து நசிந்து போய்விடுவார்கள். இதைக் காலந்தான் புகட்ட முடியும்,

மற்றபடி, தென்மொழி ஒரு நாற்றங்கால் நிலமாகத்தான் இருந்தது. அது பயிரை விளைவிக்கிற நிலமாக இல்லை—என்பதைக் குறை—என்று நீ சுட்டியுள்ளாய், உனக்குத் தெரியுமா? நாற்றங்கால் என்றும் பயிரை விளைவிக்கிற நிலமாக இருக்க வியலாது; ஆனால் அந்த நாற்றங்காலில் உள்ள பயிர்களைப் பிடுங்கி வேறு நிலத்தில் நட்ட பின் அந் நாற்றங்கால் நிலத்திலும் சில பயிர்களை விளைவிப்பார்கள். அந்த வகைப் பயிராகத்தான் நீயும் உன் உடன்பிறப்புகளும் விளைந்திருக்கிறீர்களே, அது போதாதா?

இனி, எனக்கும் உனக்கும் உள்ள உறவின் தன்மையை எனக்கே புலப்படுத்தி எழுதும்படி

Scanned with CamScanner

எழுதியிருக்கிறாயே, அது எனக்குச் சிறு நகைப்பைத் தந்தது. எல்லாவற்றுக்கும் முதலில்—நீ என் மகன்; நான் உன் தந்தை! அந்த இரண்டு சொற்களுக்கும் பெருமை தரும்படிதான் நாமும் நடந்து கொண்டு வருகிறோம். ஆனால் என் கடமை உன்னை உருவாக்கியதுடன் (உடலால் மட்டும் அன்று; உணர்வுகளாலும் அறிவாலும்) முடிந்தது; உன் கடமை முடியவில்லையேடா, கண்ணு! உனக்கு நான் தந்தை என்ற வகையில் சில கடமைகள் உண்டு; அதன் பின்னர் ஆசான், குரு என்று நீயே கண்டு கொண்டபடி—அதன் வகையிலும் சில கடமைகள் உண்டு. அவை இரண்டையும் நீ புறந் தள்ளி விட்டு, மக்கள், கடமை என்று நீயே அல்லவா முந்திக் கொண்டு என்னையும் உன்னைப் புறந்தந்த உன் அன்பு அன்னையையும் புறந்தள்ளி விட்டுப் புறப்பட்டுப் போனாய்! நீ சென்றது தவறு என்று நாங்கள் நினைக்கவில்லை; நினைக்க மாட்டோம்! ஆனால் நீ நினைத்திருக்க வேண்டுமே! நீ என்னைத் தந்தை என்றும், குருவென்றும் மறந்து விட்டாலும், நான் உன்னை மகனென்றும், 'மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனியவன்' என்றும் மறவாத தன்மையினால்தான் நான் இவ் விடை மடலை—உன் பொருட்டு—பல வகையான புறத்தடைகளும்—உணவுண்ணாமை போன்ற அகத்தடைகளும் இருந்தும், அவற்றுக் கிடையில் விட்டு விடாத தொடர்ந்த உணர்வுடன் எழுதிக் கொண்டுள்ளேன்—என்பதையாகிலும் நீ உணர்ந்து—என் அன்பையும்—உன் தகுதியையும் எடை யிட்டுக் கொள்.

இறுதியாக உன் மடலில் இலக்கிய உணர்வு விளக்கங்களைப் பற்றி நீ தெரிவித்துள்ள கருத்துகளும் கூட அத்துணைச் சரியானவையல்ல.

இலக்கிய உணர்வு என்பது படைப்புணர்வு. காதல், வீரம் போன்ற மூல உணர்வுகளுக்கும் மூலமானது. ஒரு வரலாற்று ஆசிரியனை விட, அறிவியலாசிரியனை விட, ஓர் இலக்கிய ஆசிரியன் உயர்ந்தவன். அவன் உணர்வு மாந்தனையே படைப்பது. வேறு எந்த மாந்தனுக்கும் கட்டுப்படாதது. காதலும் வீரமும் பொருளும் அறிவும் கூட அவனுக்குள் அடக்கம்! இவ்வுலகில் உள்ள அனைத்து உணர்வுகளும் இல்லாமற் போனாலும் கூட இலக்கிய உணர்வு ஒன்றினாலேயே மக்கள் மனமகிழ்வுடன் வாழ்ந்து விட முடியும். இனி, அதைப் பற்றி இன்னும் விரிவாகவும் விளக்கமாகவும் சொல்வதற்கு இம் மடல் இடந்தராது; எனக்கு நேரமும் இல்லை. ஆனால் நீ சொன்னதை மட்டும் விளக்கிச் சொல்ல இவ்விளக்கம் தேவை. அத்தகைய இலக்கிய ஆசிரியனின் மனம் கவர்ந்த ஒன்றைத்தான் அவன் இலக்கியமாக வடிக்க முடியும். இவ்வுலகம் உள்ளளவும் மார்க்சுக்கு எத்துணை மதிப்பு இருக்குமோ அத்துணை மதிப்பு டால்சுடாய்க்கும், திருவள்ளுவருக்கும் இருக்கும். ஆனால் மூவரும் வேறு வேறு கோணங்களில் நிற்பவர்கள் எனினும் அவை ஒன்றைவிட ஒன்று உயர்ந்தது, மேம்பட்டது என்று கூறி விட முடியாது. இருப்பினும் என் இலக்கிய உணர்வு நீ கூறிய குமுக உணர்வையும் பொருளுணர்வையும் வேறுபட்டனவாகக் கொண்டு இயங்கவில்லையே!

காலம் வரும், என் குமுக உணர்வுகளும் பொருளுணர்வுகளும் இலக்கியமாக வெளிப்படும் காத்திரு! இவ்வகையில் இது போதும்!

அன்பு மகனே!

உன் அன்பு மடல்களும் அறிவு மடல்களும் தேவையானவை. நான் உன் கருத்துகளுக்கு மாறான வகையில் விளக்கம் கூறுகிறேன் என்பதால், உனக்கு இன்னும் தெளிவு ஏற்படவில்லை என்று கருதி அமைந்து விடாதே!

நீ எப்படி அறிவைத் தேடிக் கொண்டிருக்கிறாயோ, அப்படியே நானும் அறிவைத் தேடிக் கொண்டுதான் உள்ளேன். இடையிடையில் பல வகையான பணிகளில் நான் மூழ்கி விடுவதால், அவற்றையெல்லாம் வெளிக்கொணர முடியவில்லை. இருப்பினும் உன் பொருட்டு இவ்விளக்கங்கள் வெளி வரலாயின.

இவற்றை அமைதியுடன் படித்து, அவற்றுள் உனக்குச் சரியென்று பட்டவற்றைக் கடைப் பிடிக்க முயற்சி செய். தவறென்று பட்டவற்றை மீண்டும் மீண்டும் சிந்தித்து, உண்மைக் காண முயல். உண்மை கண்டால், தெரிவி. இல்லையென்றால் உண்மையில்லாத நிலையை விளக்கமாக எனக்கு அறிவி.

இங்கு அனைவரும் நலம். தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு தொடர்வது பற்றி இன்னும் ஒரு முடிவும் எடுக்கவில்லை. தமிழ்நிலம் விரைவில் வரும். முகிலுக்கும் இளங்கோவிற்கும் என் அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவி. பிறபின்.

அன்பு, அப்பா.

தமிழினச் சிக்கல்!

'ஐம்பதாண்டுகளுக்கு முன், நிலம் பெருத்த ஆண்டைகள் தங்களின் பண்ணையாட்களுக்கு—அடிமைகளுக்குத் திருமணத்திற்குப் பணம் கொடுத்து மணமகளைச் சொந்தம் கொண்டாடுவதுமுண்டு. இதற்குச் 'சுகத்தைப் பணம்' என்ற வழக்குமுண்டு' —கண்ணோட்டம் பக். 16—மே, 1989

"திராவிடக் கலையொழுக்கம் தாய்வழியாட்சி முறைக் குடும்ப அமைப்பு உடையது. அதில் பெண்ணுக்கு—தாய்க்கு—மிகவும் போற்றத்தக்க இடம் கொடுக்கப் பெறுகிறது, இன்று தந்தைவழியாட்சிக் குடும்பம் வந்து விட்ட போதிலும் முந்திய கலையொழுக்கம் பண்புகளும் — மதிப்பீடுகளும் சிந்தனை வடிவங்களும் இன்னும் அழியவில்லை"

—'படிகள்' சனவரி 1980.

—பறம்பை அறிவன்.

Scanned with CamScanner

இளைஞர்களின் ஆற்றலை வீணடிக்கும் இந்தி(ய) அரசு!

-அதியமான்-

ஒரு நாட்டில் இளைஞர்களே ஆற்றல் மிகுந்த செயல் வீரர்கள். அவர்களுடைய ஆற்றல்களை, திறமைகளை நாட்டரசு பயன்படுத்திக் கொள்ளா-விட்டால், அவர்களுடைய ஆற்றல்கள் தேங்குமானால் தண்ணீர் போகும் வழியை மறித்தால் அந் நீர் வேறுவழியாகச் செல்வதைப் போல, இளைஞர்களின் ஆற்றல்களும் வேறுவழி திரும்பி தமக்கென ஒரு வழியைக் கண்டு சென்றுவிடும். இது சில வேளைகளில் கேடான செயல்களைக் கூடச் செய்து விடும். இதுதான் மனவியல். இதனை அரசு கட்டாயம் உணர வேண்டும். அல்லாக்கால் நாட்டில் ஒழுங்கும் தவறும். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந் நாடு உரிமை வாழ்வைப் பெற்ற பின் தொடக்கக் காலத்தில் சிறு அளவில் இளைஞர்களைப் பயன்படுத்தியது. வர வர இந்தியாவின் ஆளுங்கட்சியினர் இளைஞர்களை அடக்கி ஆள எண்ணங் கொண்டுள்ளனரே யன்றி அவர்களுடைய ஆற்றல்களை நாட்டு நலனுக்குப் பயன்படச் செய்திலர். எனவே அவர்களுடைய ஆற்றல்கள், திறமைகள் யாவும் வீணாகி வருகின்றன. இன்னுஞ் சொல்வதானால் கேடான வழிகளுக்கு அரசு அவர்களைத் திசை திருப்பி விடுகிறது.

கல்விக்கூடங்களில்:

ஒரு கல்விக்கூடத்தில் முதல் வகுப்பில் 25 மாணவர்கள் சேர்ந்தால், கல்லூரிக்குச் செல்வோர் மூன்று மாணவர்களாக இருக்கிறார்கள். இது நூற்றுக்கு 12 பேர் என்ற கணக்கில்தான் உள்ளது ஏன் இந்த நிலை என்பதை அரசு இன்னும் ஆய்ந்து பார்க்கவில்லை. அதற்கான கரணியங்களை ஆய்வது கேடாகும் என அரசு கருதுகிறது. ஏனெனில் இம் மேனியாகக் கூட்டினால் படித்து முடித்து வருவோருக்கு வேலை கொடுக்க வேண்டுமே என்ற அச்சத்தில் இவ் வாய்விற்குச் செல்ல அரசு அஞ்சுகிறது. இந்திய அரசியல் சட்டத்தில் கட்டாயக் கல்வி வழங்க வேண்டுமென இருந்தும், அதனை நடைமுறைப் படுத்தாததே இதற்குச் சான்றாகும். விடுதலையடைந்து நாற்பது ஆண்டுகள் முடிந்தும் கல்வியை—யாவருக்கும் அளிக்கும் கட்டாயக் கல்வியை—நடைமுறைப் படுத்தவில்லை ஏன்றால் இவர்கள் என்ன ஆட்சி செய்கிறார்கள் என யாருக்குந் தெரியவில்லை. அரசு தன்னாய்வு செய்து கொள்வதற்கே கூசுகிறது. அது மட்டுமன்று, நாட்டு மக்கள் அனைவரும் முட்டாள்களாகவே இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறது. அரசியல் சட்டத்தில் அறிவியல் அறிவை வளர்க்க வேண்டுமென இருக்கிறது. அதற்கிணங்க எந்த வகையிலும் மாணவர்களிடத்தில் அறிவியலை வளர்க்கும் ஆற்றலை உண்டாக்கவில்லை. அறிவியல் கருவிகளை கையகப் படுத்திக் கொண்டு அரசு வானொலி, வானொளியில் விலங்காண்டிக்கால பகுத்தறிவிற் கொவ்வாத இராமாயணம், மகாபாரதம் போன்ற மூடக்கொள்கைகள் நிறைந்த கருத்துகளைப் பரப்பி வருவதே இதற்கு எடுத்துக்காட்டுகள். பள்ளிகளில் பாடத்திட்டங்கள் இளைஞர்களுடைய அறிவு வளர்ச்சிக்குத் துணை நிற்பதாகவுமில்லை. அடிக்கடி பாடத் திட்டங்களை மாற்றியமைத்துக் கல்வியைக் குழப்பி வருகிறது, அரசு. ஆங்கிலேயர்க் காலக் கல்வி அவர்களுடைய ஆட்சிக்குத் துணையாக இருக்கும்படியே அமைந்திருந்தது எனக் கூறிக் கொண்டே அந்தப் பாடத் திட்டங்களையே மாற்றி மாற்றிக் கற்பிக்கும் நிலைகளைத்தான் காண்கிறோம்.

ஆங்கிலேயர் ஆட்சியில் பள்ளி இறுதித் தேர்வு (S.S.L.C.) 11 ஆண்டுகளில் முடிந்தது. இடைநடு (Intermediate) 1½ ஆண்டு. இளங்கலைப் படிப்பு 3 ஆண்டுகள். ஆகப் பதினைந்தாண்டுகளில் இளங்கலை (B.A.) படிப்பு முடிந்தது. வெளியில் வந்ததும் வேலை கிடைத்தது. இது தவிர தொழிற்கல்வி, பொறியியற் கல்வி, மருத்துவக் கல்வியும் இருந்தது. இளைஞர்கள் பணியிலமர்த்தப் பட்டனர். அவர்களுக்குப்பின் கல்வியைக் குழப்பினர். நுழைவு வகுப்பு (P.U.C.) ஓராண்டு. பின் கல்லூரிப் படிப்பு 3 ஆண்டுகள் என்றானது. பிறகு இதுவும் சரியில்லையென்று தொழிற்கல்வி புகுத்துவதாய்க் கூறிப் பள்ளி இறுதிப் படிப்பு (High School Study) 5 ஆண்டுகளோடு முடிந்தது. +1 +2 எனக் கூறி பயனற்ற (Vocational group) தொழிற்கல்வியைப் புகுத்தினர். இக் கல்வியால் எப் பயனுமில்லை. தொடக்கப்பள்ளி முதல் கல்லூரிப் படிப்பு முடியும் வரை ஆங்கிலேயர் காலத்தில் இருந்ததைப போல 15 ஆண்டுகளே இன்றும் இருக்கின்றன. அவர்களின் காலப் படிப்புப் போலவே அலுவலகப் பணிகளுக்கே இளைஞர்களை அணியஞ் செய்து கொண்டு, அப்படி முன்னேறி விட்டோம் இப்படி முன்னேறி விட்டோம் என்று மக்களை ஏமாற்றிக் கொண்டு அரசை நடத்தும் அரசியற் கட்சியினரே முன்னேறி இருக்கிறார்கள். கோடி கோடியாகச் செல்வக் குவியல்களை அடைகாத்துக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலும் எல்லா அமைச்சர்கள் மீதும் கையூட்டு வழக்கு இருப்பதாய்ப் பேசப் படுகிறது. இந்தி(ய)த் தலைமையமைச்சர் மீதே கையூட்டு வழக்கு இருந்தால் கையூட்டுகள் வளம் பெற்றுதானே வாழும்!

இவர்களின் நிலை ஒரு பக்கம் இங்ஙனம் இருக்க தனியார்களுக்குத் தொழிற்கல்விக் கூடங்-

Scanned with CamScanner

களைக் கொடுத்து அவர்கள் நன்கொடை என்ற பெயரைக் கையூட்டிற்குப் புதிதாக பெயர் வைத்துக் கொண்டு, கொள்ளை அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அரசுக்குத் தெரிந்தும் பாரா முகமாக இருக்கிறது. இதனைப் புலப்படுத்திப் பெருஞ்சித்திரனார் அருமையாகப் பாடல் எழுதி இருக்கிறார்கள்,

கையூட்டால் கல்வி கற்றுக்
கையூட்டால் பட்டம் பெற்றுக்
கையூட்டால் பணியிலமர்ந்து
கையூட்டால் புகழும் பெற்றுக்
கையூட்டே நோக்கமதாய்க்
கையூட்டே பயனென் றுரைக்கும்
கையூட்டுக் காலமிது!
கையூட்டு ஞாலமிது!
கையூட்டார் வாழ்வதரிதே

(தெ.மொ. 25. 2)

எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எவ் வகையான வேலைக்காக எந்த அலுவலகஞ் சென்றாலும் கையூட்டுக் கொடுக்காமல் செயல்களைச் செய்து முடிக்க இயலவில்லை.

இந் நிலையில் தமிழ்நாட்டு இளைஞர்கள் தம் தாய் தந்தையரின் சொத்துகளை விற்றுப் படித்து விட்டு, வெளியில் வரும்போது ஒட்டாண்டிகளாகி விடுகின்றனர். வேலை தேடி அலைகின்றனர். கையூட்டுக் கொடுக்க வழியேது? சாலைகளில் அலைகிறார்கள். இவர்களைப் பட நடிகர்கள் பணத்தைக் கொடுத்துத் தம் பக்கம் இழுத்து, அவர்கள் பெயரால் மன்றங்களை அமைக்கச் செய்து, மாணவர்களின் உணர்ச்சிகளை வேறு வழிச் செல்லத் தூண்டி வருகிறார்கள். அரசிற்கு இது நல்ல வாய்ப்பாகி விட்டது. இளைஞர்கள் இப்படி அலைகிறார்களே என்ற எவ்வகைக் கவலையும் இல்லாமல் அவர்களுடைய ஆற்றலை நாட்டுக்குப் பயன்படவிடாமல் வீணடிக்கிறார்கள். எவ்வகையான கல்வி கற்றாலும் வேலை கிடைக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞர்களை ஒன்றுக்கும் உதாவாதவர்களாக ஆக்கி விட்டது. பல இலக்கக் கணக்கில் இளைஞர்கள் அலைந்து கொண்டு ஒழுக்கக் கேடர்களாய் மாற்றப் பட்டு வருகிறார்கள்.

இவர்களுடைய ஆற்றலைப் பயன்படுத்த நடுவணரசோ, மாநில அரசோ எவ்வகை நடவடிக்கைகளும் எடுக்காமல் கட்சிப் பணியையும், ஒப்போலை பெறுவதற்காக வறுமை மக்களைக் கவரும் வீண்செலவுகளையும் செய்து கொண்டு வருகின்றன. பலருக்கு வேலை வாய்ப்பு அகவை முடிந்துவிட்டது. இவர்களை சார உணவு அமைப்புகள், நேரு வேலைத் திட்டம் போன்றவற்றைப் பரப்பி ஏமாற்றுகிறது. இத்திட்டங்களில் பணியில் அமர்த்தப்படுபவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்குச் சம்பளம் உருபா 200/- ஒருவருடைய வாழ்க்கையையே கழிக்க முடியாத இச் சம்பளத் திட்டத்தில் படிப்பதற்காக வீடு, தோட்டம், ஆடு மாடுகளை, நகை நட்டுகளை அடகு வைத்தும் அல்லது விற்றும் விட்ட நிலையில் இவ் விளைஞர்களுடைய நிலைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். இச் சூழலைச் சரிக்கட்டவே பெண் வீட்டாரிடம் மணக்கொடை (வரதட்சணை) போன்ற கொள்ளையடிப்புகள் வெளிப்படையாக நடைபெறுகின்றன. இக் கொள்ளைகளை நிறுத்துவதற்குச் சட்டங்களை அரசு காட்டுகிறது. மணக்கொடை பெறுவது குற்றமெனக் கருத்துகளைப் பரப்பி ஏமாற்றுகிறது. இதனாலேயே பெண் கொலைகள் நடைபெறுகின்றன. நாள் தவறாமல் இக்கொலைகள் நடப்பதைச் செய்தித் தாள்களில் படித்துப் படித்து நெஞ்சு புண்ணாகிறது. குமுகாயப் பார்வையுடையவர் சிலர் நெஞ்சடைப்பு நோயால் சாகின்றனர். மணக்கொடை தவறு எனக் கூறும் துறையினரே இக் கொடையை நிறுத்தவில்லை. இளைஞர்கள் படிப்பை முடித்து விட்டு வெளியில் வந்ததும் கண்ணைக் கட்டிக் காட்டிற்குள் விட்டவர்களைப் போலப் பிழைக்க வழியின்றித் தவிக்கின்றனர். வேலை தேடித் தரும அலுவலகஞ் சென்று பட்டினியோடு கரத்துக் கிடக்கின்றனர். கட்சி விளம்பரங்களுக்கும், அமைச்சர்களுடைய சுற்றுச் செலவுத் திட்டங்களுக்கும் செலவு செய்யும் கோடிக் கணக்கான பணங்களைத் தொழிற்சாலைகள், நாட்டு முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன்படுத்தினாலே பல இயக்க இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டு பண்ணி விட முடியும். ஆனால் செய்ய மாட்டார்கள். எனவே இளைஞர்களின் ஆற்றல் வீணாகிக் கொண்டு வருகிறது.

இலங்கையில் தமிழர்கள் தம் தாயகத்தை மீட்கும் போராட்டத்தை வடநாட்டுத் தலைமையமைச்சர் இராசீவ் கெடுத்தார். அங்குச் சென்று இந்திய அரசு பற்பல கோடிப் பணத்தைப் பாழடித்ததே, என்ன பயன் கிடைத்தது. அப் பணத்தை இந் நாட்டு இளைஞர்களை வாழ வைக்க பல திட்டங்களைப் போட்டு அவர்களின் நிலைகளை உயர்த்தி இருக்கலாம். இராசீவ் செய்ய மாட்டார். ஏனென்றால் அவர் தமிழ்நாட்டு இளைஞர்கள்மீது கரவான எண்ணங் கொண்டவர். தமிழக இளைஞர்களுக்கு அறிவு வந்துவிடக் கூடாது என்பதில் மிக எச்சரிக்கையாகச் செயல்பட்டவர். அதனால் தேவையற்ற செலவை இலங்கையில் செய்து இந் நாட்டு இளைஞர்களைக் கெடுத்தார்; இருந்தால் இன்னும் கெடுத்திருப்பார். இளைஞர்களோ பாட்டி சொன்ன வழிகாட்டுதலை நம்பி 'பாட்டி சொல்லைத் தட்டாதே' என்றிருக்கின்றனர்.

பெற்றோருடைய அறிவுரைகளால் ஒழுக்கம் உள்ளவர்களாகவே இருக்கின்றனர். பள்ளிக்குச் சென்றதும் ஒழுங்கென்பதில்லை. ஆசிரியர்கள்

Scanned with CamScanner

மாணவர்களைத் திருத்த முடியவில்லை. ஒழுங்கு தவறும் மாணவர்களைத் திருத்தினால் தண்டம் கொடுத்தால் பெற்றோருடன் அரசியல் கட்சிகளும் சேர்ந்து பெரும் போராட்டத்தைத் தொடங்கி, முறையற்றக் கிளர்ச்சிகளைச் செய்கிறார்கள். பொதுச்சொத்துக்களுக்கு இழப்பை உண்டாக்கினாலும் அரசு ஒன்றுஞ் செய்ய முடியாது. இப்படிப் பட்ட ஒழுக்கக் கேடுகளைக் கண்டிக்காததால் மாணவர்கள் கெட்ட வழிகளைத் துணிவோடு செய்கின்றனர். பொது ஒழுக்கம் கெட்டு வருகிறது. படித்த இளைஞர்களும் மற்ற இளைஞர்களும் வாழ முடியவில்லையே ஏன் எனச் சிந்திப்பதில்லை. ஆட்சி செய்யும் அரசியல் அறிவுமில்லாமல் நடிகர் பின் போய்க் கொண்டிருக்கிறார்கள். நடிகர்களே இப்போது அரசியல் தலைவர்களாக வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டு அரசியல் தலைவர்களும் நடிப்புச் சுவைஞர்களின் கூட்டத்தை எண்ணி நடிகர்களை அரசியல் பணிகளுக்கு இழுத்து நாட்டைச் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந் நடிகர்கள் பணத்திற்காக எப்படியும் நடிப்பார்கள். அதுபோல அரசியலிலும் எப்படியும் நடக்கலாம் என்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நாட்டைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. அதைப் பற்றிச் சிந்திக்க நேரமும் கிடைக்காது. அவர்கள் பின் செல்லும் இளைஞர்கள் எப்படி இருப்பார்கள் என்பது சொல்லாமலே தெரியும். இளைஞர்களே சிந்தியுங்கள். இந்நாட்டில் பார்ப்பனர் இளைஞர்கள் எவரேனும் வேலையின்றி இருக்கிறார்களா? பார்ப்பனரல்லாத இளைஞர்கள் மட்டும் இப்படி அலைவதை அவர்கள் எண்ணிப் பார்த்தால் அரசு இவர்களை ஏமாற்றும் நிலை வளருமா? வளராதே. இளைஞர்கள் சாதிச் சண்டைகளிலும் சமயப் போராட்டங்களிலும் கலந்து தம்மைத் தாமே அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இளைஞர்கள் நிலை உயர:

இளைஞர்கள் முதலில் தன்னாய்வு செய்து தங்களுடைய நிலைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது படிக்கும் பள்ளிப் பாடங்கள் அறிவு வளர்ச்சிக்கும், தங்களுடைய பிழைப்பிற்கும் வழி வகுக்கக் கூடியனவாய் இருக்கின்றனவா என்பதைச் சிந்தித்து அறிந்து அரசை மாற்றங்களைச் செய்யத்தூண்ட வேண்டும். கையூட்டு வாங்கும் அதிகாரிகளைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும். அரசு பொய் வழக்குகளைத் தொடுத்தால் அறமன்றங்களில் நின்று வழக்காடத் துணிவோடு இயங்க வேண்டும். இன உணர்வு அற்ற அதிகாரிகளுக்கு எவ்வகையில் படிப்பினைகளைக்கற்பிக்க வேண்டுமோ அப்படிக் கற்பிக்க வேண்டும். உலக அறிவு (வரலாறு அரசியல், குமுகஇயல்) பெற மிகுதியாக நூல்களைப் படிக்கத் தவறக்கூடாது. எத் துறையில் விருப்பம் உள்ளதோ, அத் துறையில் பயிற்சி பெற்று ஆய்வுகள் செய்தல் வேண்டும். யாவற்றுக்கும் முதன்மையாக மொழி, இன, நாட்டுப் பற்றுடையவர்களாய் இருக்க வேண்டும். தங்கள் ஓய்வு வேளைகளில் அமைதியாக இருந்து இவை பற்றிக் கட்டாயம் சிந்திக்க வேண்டும். தங்களுக்கு வருமானம் இருக்குமானால், அதில் ஒரு சிறு பகுதியை இம் மூன்று வகைகளுக்காகச் செலவிட வேண்டும். ஒழுக்கம் சிறக்க திருக்குறள் போன்ற அறநெறி நூல்களைப் படித்து அதன்படி நடக்க முயல வேண்டும். ஞாயமற்றச் செயல்களை எதிர்த்துப் போராடத்துணிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை (கு. 669)

இன்பம் பயக்கும் பணியைச் செய்யும் போது துன்பம் வரினும் தளராது செயல்பட வேண்டும் என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். வாழ்க்கை ஒரு நோக்கத்திற்காக வாழ வேண்டும். மொழி, இன, நாட்டு முன்னேற்றத்திற்காகப் போராடும் தலைவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டும். அவர்களைப் போற்ற வேண்டும். உதவிகளையும் செய்தல் வேண்டும். உலகத்தில் உரிமைக்காகப் போராடிய தலைவர்களுடைய வரலாற்றைக் கற்றுத் தெளிவு பெற வேண்டும். ஏமாற்றும் அரசியல் வழக்கர்களைக் கண்டு நடமாட விடாதபடி செய்ய வேண்டும்.

அரசின் கடமை:

நாட்டில் செய்ய வேண்டிய வினைகளைத் துணிவோடு செய்ய வல்லவர் இளைஞர்களே. செயல்களைச் செய்யும் முன் இதனைச் செய்தால் பின் விளைவு இப்படி இருக்குமோ, அல்லாக்கால் அப்படி இருக்குமோ என எண்ணி மயங்குவது செயற்கரிய செய்யும் வினைகளுக்கு முட்டுக் கட்டை. அரசியலில் செய்ய வேண்டியத் திட்டங்களைத் துணிந்து செய்தல் வேண்டும். அச்சம், மயக்கம் ஏற்படின் எச் செயலையும் செய்ய இயலாமல் போய்விடும். வினை செய்வார் இல்லா நாடு மாட்சிமையுடையதாய் இருப்பினும் வீழ்ந்துபடும்.

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண். (கு. 750)

செவ்வையான மாட்சிமையை உடைத்தாய நாடாக இருந்தாலும் வினைமாட்சிக்குச் செய்வினைஞர் இல்லா நாடு தன்னுடைய அரணை இழக்கும் என்பார், பேராசான். செவ்வையான செயல் திட்டங்களைச், செயல்படுத்தும் இளைஞர்களை அரசு பயன்படுத்தாவிடின், முன்னேற்றத்தைக் காண இயலாத நாடாகும். எனவே நாட்டின் நற்பணிகளை இளைஞர்களின் ஆற்றல்களே துணிந்து செயல்படுத்த வலிமையுடையது.

முன்னர் காமராசு அவர்கள் இத் தமிழ்நிலத்திற்கு முதல்வராய் இருக்கும்போது, இளைஞர்களையே அரசு அலுவல்களில் நேரிடைத் தேர்வு

Scanned with CamScanner

"கம்மங்களை...நோக்கி" ஏன் போகிறோம்? எண்ணிப் பார்ப்போம்!

—பறம்பை அறிவன்—

இளைஞர்கள், மாணவர்கள், ஆம், இளைய தலைமுறைமீது அக்கறை கொண்டுள்ள இயக்கங்கள் மீது நமக்கெல்லாம் ஒரு மதிப்புண்டு. குறிப்பாக மாணவர்கள் பொறுப்புள்ளவர்களாக இயங்குதல் வேண்டுமென்பதில் ஆசிரியர்கள் ஆர்வம் காட்டுதல் கட்டாயத் தேவை என்று கூடச் சொல்லலாம்!

முற்போக்கு மாணவர்—இளைஞர் இயக்கம், **'மக்களிடமிருந்து கற்போம்! மக்களுக்குக் கற்போம்!'** என்ற மாவோ மந்திரத்தை கூறிக் கொண்டு **'கம்மங்களுக்குச் செல்வோம்'** என்று கூறியுள்ளது!

இளைஞர்களும், மாணவர்களும் 'சும்மா' இல்லை, அவர்கள் ஏற்கனவே, குறைந்தது 'ஒரு திரைப்பட நடிகர் நேயராக, இருப்பார்கள்; அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களாக இருப்பார்கள். அவர்களின் 'அமைப்பின் மீது' நமக்குக் கருத்து வேறுபாடுகளும், முரண்பாடுகளும் இருக்கும்! 'அரசியல் பகை' கூட இருக்கும்!! ஆனால், அவர்கள் இளைஞர்கள்; மாணவர்கள்! எனவே, 'கம்மங்களில்' அன்றாட வாழ்க்கைச் சிக்கலோடு, புதியவுறவுகளில் புதையுண்டு கிடக்கும் அவர்களிடம் நாம் நேரிய அணுகுமுறை கொண்டிருத்தல் வேண்டும்!

'மக்களை மதிப்பது' என்பதை நாம் முதல் நோக்கமாகக் கொண்டவர்கள். ஆகவேதான் நாம் **'மக்களிடமிருந்து கற்போம்'** என்று கூறும் முதல் மந்திரத்தை முன்னெடுத்துச் செல்கிறோம்!

'வாழ்க்கை நெருக்கடிகளை' அவர்கள் நன்றாக அறிவார்கள். துன்பத்தைத் தூக்கிச் சுமக்கப் பழக்கப்பட்ட அவர்கள் தேங்கிக் கிடக்கிறார்கள்! அதைத் தாங்க முடியாதவர்கள் 'வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்! எங்குப் போனாலும் அங்கே, அவர்களை அந்தத் துயர வாழ்க்கை தொட்டுத் தொடர்ந்து கொண்டிருப்பதை அறிவார்கள்! ஆயினும் 'மண்ணின் மணம்' அவர்களை இயக்கிக் கொண்டே இருக்கும்!

'வெளியுலகம்'—கானல் நீரா? இல்லை 'காவிரியா? 'கங்கை'தானா என்றறிய இந்த நெருக்கடி உதவப் போகிறதா? அதற்காக அவர்களைத் 'தூண்டப் போகிறோமா? இல்லை. 'சுரண்டல்', கம்மத்தில் உள்ள நிலக்கிழார்களிடம் 'குவிந்து' கிடக்கிறது. 'அள்ளிக் கொள்ளுங்கள்' என அடையாளம் காட்டப் போகின்றார்களா?

பிழைப்புத் தேடி நகரங்களுக்கும், குறித்த மாநிலங்களுக்கும், ஏன் அயல்நாடுகளுக்கும் 'படை' எடுக்கும் இந்த மக்கள் பிழைக்கக் கம்மத்திலேயே வழி தேடித் தரப் போகின்றார்களா?

—இப்படி வினாக்கள் நம்மை நோக்கி எழாமல் போகுமா என்ன?

'இருக்கின்ற கை கால் நலத்தை நாம் இழந்து விடாமலிருக்க' இப்படியே கம்மத்தில் கிடந்து காலத்தைக் கரைய விட்டு விடப் போகின்றோமா?

நகரத்திளைஞர்கள் போடும் இந்தக் 'கம்மத்தை நோக்கிப் போவோம்' திட்டம் எப்படியிருக்கும்?

நாட்டுப்புற இளைஞர்களோடு இணைய இவர்கள் வருகிறார்கள். நல்லது, ஆனாலும், ஐந்தாய அரசுத் திட்டம் போட்டு, அசையாமல் தன் பிடிக்குள் வைக்க, நடுவண் அரசு, சவகர் பேரால் வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றையும் உருவாக்கியுள்ளதே!

இங்கே, 'மாணவர்கள்' போய்ச் செய்யப் போவதென்ன? 'எதிர்க்கட்சிகளை', நாடாளுமன்றத் தேர்தல் நம்பிக்கைகளைத் தகர்த்துவிட்டு நாம் கட்டப் போகும் புதிய நம்பிக்கைதான் என்ன?

தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர் ஒற்றுமையை உருவாக்க 'இராமதாசர்'களாக மாறப் போகின்றோமா?

உழவர், தொழிலாளர், ஆசிரியர், மாணவர் ஒற்றுமை என்று கூறி—நாம் தரப்போகும் கல்வி யாது? அதற்கான 'கல்வித் திட்டம்' உண்டா?

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

செய்து அமர்த்தினர். கலைஞர் அவர்களும் அதனைப் பின்பற்றிப் பெரிய அதிகாரிகளையும் இளைஞர்களாகப் பார்த்து அமர்த்தினர். அதன் பயன் செயல் திட்டங்கள் துணிவாகச் செய்யப்பட்டுப் பிற மாநிலங்களுக்குத் தமிழகம் முன் மாதிரியாக இருந்தது. இப்போது நடுவண் அரசாகட்டும், மாநில அரசாகட்டும் இளைஞர்களைத் தெருவில் அலைய விட்டு விட்டது. எனவே முன்னேற்றத் திட்டங்கள் செயலிழந்து விட்டன. இளைஞர்கள் தம் ஆற்றலைப் பயன்படுத்தாத அரசின் மீது பாயும் நிலையில் உள்ளனர். இவர்கள் ஆற்றலைத் திசை திருப்ப முயன்று கொண்டு வருகின்றன. இதனை இளைஞர் அறிந்து கொண்டால் அரசு விரைவில் இளைஞர்களின் ஆற்றலை நினைத்துப் பார்க்கும். அரசு அவர்களை படை கொண்டு தாக்கி அடக்கி விடலாமெனக் கற்பனை செய்து கனவில் மகிழ்ந்து கொண்டிருக்கிறது. உரிமைகளை மீட்கும் எண்ணம் இளைஞர்களுக்குத் தோன்றிப் போராடத் துணிந்த பின் கூலிப் படைகள் உரிமை வீரர்களிடம் நிற்க இயலாது. எனவே இந்திய அரசு இளைஞர்களின் ஆற்றலை வீணடிக்க வேண்டாம். O

பன்மொழிப் புலவர்

அப்பாத்துரையார் குடும்பத்திற்கு அருள் கனிந்து உதவுங்கள்!

பேரன்பினிய பெருந்தமிழ் நெஞ்சங்களே!

வணக்கம். அண்மையில் காலஞ்சென்ற பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் பற்றித் தென்மொழியில் ஏற்கனவே அவர் மறைவுக் குறித்த (சு 25 ஓ 1) ஆசிரியவுரையில் மிகத் தெளிவாகவும், அவர் குடும்பம் பற்றி மிக உண்மையாகவும் பல செய்திகளை எழுதியுள்ளேன்.

தமிழகத்துத் தோன்றிய சிறந்த பெருந்தமிழறிஞர்களுள் நம் அப்பாத்துரையார் மிகச் சிறந்த பேரறிஞரும், தமிழ், தமிழின, தமிழகக் காப்பாளருமாவார். தாமுண்டு தாம் கற்ற தமிழுண்டு என்று எண்ணி, அத்தமிழொடு சேர்ந்த பெரும்புலமையை வைத்து வாணிகம் நடத்திப் பெரும் பொருள் ஈட்டி, நலமும் வளமும் சேர்ந்த வாழ்க்கை நடத்தாமல், தன்மானத்துடனும் அதனினும் ஓங்கிய இனமானத்துடனும், கட்டுப்பாடும் கடமையுணர்வும் நிறைந்த கொள்கை வாழ்க்கை நடத்தி இறுதிவரை நலிந்தும் மெலிந்தும் போனவர் நம் பன்மொழிப் புலவர். அதனால் அவர்க்குப் பின்னர் அவர் குடும்பத்தையும் ஏதிலியாக விட்டுத் சென்றவர். இந்த ஏதுங்கெட்ட அடிமைத் தமிழகத்தில் அறிவுத் தொண்டும் இனத் தொண்டும் உண்மையான நெஞ்சுரத்துடன் ஆற்ற முயன்றார்க்கும் முயல்வார்க்கும் என்ன முடிவு நேர்ந்ததோ, நேருமோ, அந்த முடிவுக்கு இலக்காகி, இறுதிவரை ஆராத் துயருற்றுக் கால வெள்ளத்துள் கரைந்துபோனார் அப் பெரும் புலவர் பெருமகனார். இனி, அவர்க்குப் பின்னர் அவர் குடும்பமோ துன்பத் துயரக் கடலுள் வறுமைப் புயலுக்கிடையில் திசைமாறிய கட்டுமரம் போல் அலைக்கழியலுற்று, அன்றாட வாழ்விற்கே அல்லல் பட்டு வாடிக் கிடக்கிறது. தமிழ், தமிழர் என்று கடைசி வரை கத்திச் சோர்ந்த அப்பெரும் புலமைப் பேற்றின் பிறங்கடைகள் நம் கண் முன்னரே இன்மைப்பாடு எய்தி வாழ்வின் இறுதி நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன!

அவ்வறிஞரின் துணைவியார் திருவாட்டி. **அலர்மேல் அப்பாத்துரையார்** அரசியல், தந்நலம் மிக்கவரால் நலம் உறிஞ்சித் துப்பியெறியப் பெற்ற, நரம்பும் நாரும் சுண்டிக் காய்ந்துபோன ஓர் ஒற்றைப் பனங்கொட்டை! மக்கட்பேறற்ற அப்பாத்துரையார் இணையருக்கு ஓர் ஆணும் இரண்டு பெண்களும் வளர்ப்புப் பிள்ளைகள். இரு பெண்களுள் மூத்த பெண் மல்லிகா தந்தைக்கு முன்னரே கண்களை மூடிக்கொண்டது. இரண்டாவது பெண் செல்வி இக்கால் தன் கணவனொடும் இரண்டு குழந்தைகளொடும், தன் அக்காளின் இரண்டு குழந்தைகளொடும், தன் தாயாருடனும் நாளொரு துயரமும் பொழுதொரு துன்பமும் ஆக, மிக மிக இடர்ப்பாட்டுடன் நாள்களைக் கடத்தி வருகின்றது. நகை முகத்தைத் தவிர வேறு நகை நட்டறியாத தண்டமிழ்ப் பெண் செல்வி, தன் ஒண்டமிழ்ப் புலமைத் தந்தையின் பெயரைச் சொல்லில் சொல்லி வாயூறும் தமிழ் எச்சிலை விழுங்கி விழுங்கி வயிருருகிறது. அதனைச் சுற்றி நிற்கும் அதனுடையவும் அதன் அக்காளுடையவும் குழந்தைகளும், நோய் மென்று தின்னும் அலர்மேல் அன்னையுமோ, எங்கிருந்தேனும் 'உதவி' என்றோர் இன்குரல் கேளாதா என்று ஏக்கப் பெருமூச்சால் தாக்கமுற்று வாழாமல் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த ஏழைப் புலவர் பிறங்கடையர்க்கு வந்து வாய்த்த செல்வமெல்லாம் ஏறத்தாழ ஐந்து இலக்க உருபாக் கடன்களே! அலர்மேலு அன்னைக்கு அன்றைய நாளில், பெருநகராட்சி அளித்த ஒரு மாடி வீட்டின் மேல் ஓர் இரண்டு இலக்கம்! வடநாட்டு வட்டிக் கடைக்காரனிடம் நகைகளின் மேல் ஓரிலக்கம்! வைப்பகங்களில் ஏறத்தாழ ஓரிலக்கம்! இவையன்றி அக்கம் பக்கத்துச் சில்லறை வாங்கல்கள் — என அனைத்தும் சேர்த்தால் இலக்கம் ஐந்துக்குப் பக்கம்! என்ன செய்வது, இவற்றை எவ்வாறு தீர்ப்பது என்ற எரிதுயரத்திலேயே புலவர் கண்களை மூடிக் கொண்டாரோ என்னவோ?

இது தொடர்பாக, அவரை எரிதீயுக்கு எண்ணெயாய் ஊற்றிவிட்டு, அச்சாம்பலின மேல் மூன்றும் நாள் கொஞ்சம் பாலையும் ஊற்றிவிட்டு, இத் தமிழகத்தை ஆளவந்த திரவிட மரபு ஆட்சி முதல்வர் கலைஞரை நான், பன்மொழிப் புலவரின் பேராசிரிய மாணவர் முனைவர் மெ. சுந்தரத்தை அழைத்துக் கொண்டு, ஒருநாள் நேரில் போய்ப் பார்த்து, அவரின் குடும்பம் விழுந்து கிடக்கும் வறுமைக் குழியிலிருந்து மீட்டெடுத்து உய்வு தரக் கெஞ்சிக் கேட்டேன். கலைஞர் இரங்காத நெஞ்சத்துடன் தாம் அக் குடும்பத்திற்குதவ விரும்பவில்லை என்று மறுத்துக் கூறித் திருப்பியனுப்பி விட்டார். தமிழ்க்கண் கொண்டு அவர் பார்க்க விரும்பவில்லையாம்! கட்சிக்கண் கொண்டுதான் அவர் பார்ப்பாராம்! உணர்த்திவிட்டார் கலைஞர்.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

‘துக்ளக்’ இழிதல் ஆசிரியர் நேருரை!

(1-2-90-ஆம் பக்கல் ‘துக்ளக்’ இதழில் வெளிவந்த ஆசிரியரின் நேருரை இது: அன்பர்களின் பார்வைக்கென அப்படியே இங்கு வெளியிடுகிறோம்.)

தமிழ்நாட்டில். மார்க்ஸிய-லெனினிஸ்ட் குழுக்களுக்குள் ஏகப்பட்ட பிரிவுகள் இருப்பது மாதிரியே—‘தமிழ் தேசியம்’ என்ற அடிப்படையில் இயங்குகின்ற குழுக்களுக்கு இடையிலும் பல பிரிவுகள் உள்ளன. ‘ஈழம்’ என்கிற கருத்தில் இலங்கையிலுள்ள பல விடுதலைக் குழுக்களுக்கு இடையில் பலவிதமான கருத்துக்கள் இருப்பது மாதிரி, ‘தமிழ் தேசியம்’ குறித்தும் பலவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

‘உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்’. இது 83-லிருந்து ஒரு அமைப்பாகச் செயல்பட்டாலும், அதற்கு முன்பிருந்தே முப்பது வருஷ காலமாக ‘தமிழ்’ மற்றும் தமிழ்நாடு குறித்தும் தொடர்ந்து பேசி வருகிறவர், இதன் அமைப்பாளரான பெருஞ்சித்திரனார். (ஆண்டு 81)

வயதானவரான பெருஞ்சித்திரனாரைச் சந்தித்துப் பேசினேன். ஆங்கில, சமஸ்கிருதக் கலப்பில்லாமல் பேசினார்.

“தமிழ்நாடு பிரிய வேண்டும் என்று இப்போதெல்லாம் பல ஆண்டுகளாக சொல்லி வந்திருக்கின்றேன். பெரியாருக்குப் பிறகு, தனித் தமிழ் நாடு கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருபவன் நான்தான். மொழி, இனம், உரிமை என்று பல வழிகளிலும் பாதிக்கப்படுகிறது தமிழகம். வடக்கத்திக்காரர்கள் அதிகமாகச் சுரண்டுவது இங்குதான். பல்லாண்டுகளாக ஆட்சி புரிந்த தமிழினம் இன்று இங்கும், பல நாடுகளிலும் பிரிந்து உரிமையற்றுக் கிடக்கிறது. இதற்கு ‘மாநில சுயாட்சி’யை தி.மு.க. போன்ற கட்சிகள் கேட்கலாம்.

“மாநில சுயாட்சி கேட்பதல்ல விடிவு. முழு அதிகாரம் பெற்ற அரசாக தமிழ்நாடு உருவாக வேண்டும். கருணாநிதியின் கொள்கை இந்த விஷயத்தில் ஏமாற்றுக் கொள்கை. தனித் தமிழ்நாடு கோரிக்கைக்காக — ‘தமிழக விடுதலை மாநாடு’ என்றே நான்கு முறை மாநாடு நடத்தி, பலர் கைதாகியிருக்கிறோம். ஆனால், தனித் தமிழ்நாடு உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. எப்படியாவது அது உருவாகியே தீரும். மக்களிடம் கண்டிப்பாக ஒரு மனமாற்றம் வரும். வெறும் கருப்புச் சட்டங்களைக் கொண்டு, இந்த விதமான உணர்வுகளை ஒடுக்கி விட முடியாது. சில இளைஞர்கள் தனியாக ‘தனித் தமிழ்நாடு’ கோரித் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்கள். ஆனால், அப்படித் தனிப்பட்ட முறையில், சில இளைஞர்கள் கூட புரட்சியை உருவாக்கி விட முடியாது. மக்களே திரண்டுதான் இந்தக் கருத்தை வலுப்படுத்த வேண்டும்”—என்று சற்று ஆவேசமான குரலில் பேசின பெருஞ்சித்திரனாரிடம், ‘திராவிட இயக்கங்களும், இதைத் தானே வலியுறுத்துகின்றன?’ என்று கேட்டதற்குச் சொன்னார்:

“முதலில் திராவிடம் என்கிற சொல்லே தமிழ்ச் சொல் அல்ல. அதே திரிபானதுதான். 1932-லேயே ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்கிற கோஷத்தைப் போட்ட பிறகு, கழகத்தில் மட்டுக் ‘திராவிடம்’ என்கிற பெயர் எதற்கு? முதலில் தி.மு.க. தனது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரை மாற்றி, ‘தமிழர் முன்னேற்றம் கழகம்’ என்று வைத்துக் கொள்ளட்டும். முன்பு தமிழ் பற்றியும், தமிழ்நாடு பற்றியும் அக்கறையுடன் பேசிய பல திராவிட இயக்கத்தவர்கள், இப்போது அது பற்றிப் பேசக் கூட பயந்த நிலையிலிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை, ‘தமிழ்நாடு பிரிய வேண்டும்; என்று சொல்கிறோமே ஒழிய, மற்ற மாநிலங்களும் அது மாதிரிக் குரல் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லவில்லை என்கிறார்: —மணா

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் புரட்சிப் பாதையை விரும்புகிறார்கள். உண்மை ஆனால், புரட்சி என்பது தேர்தலில் வேண்டாமா? உழவர் புரட்சி, புதிய மக்கள் நாயகப் புரட்சி என்று பிரித்துப் பிரித்துப் பேசுகிறோமே, ‘தமிழக மக்களின் விடுவிப்புக்கான ஒரு புரட்சியை மட்டும் முன்னே வைத்தால் என்ன?

நாம் ‘எங்கே இருக்கிறோம்; எங்கே போகப் போகிறோம்’ என்பதைத் தெளிவுபடக் கூறுங்கள்.

—கேள்விகள் வெடிக்கின்றன.

விடைகள்...தேடிக் கொண்டிருக்கிறோம்!

அப்படித் தானே...

வன்முறைகளால் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 5 இலக்கம் குடும்பங்களில் தாக்கம்!

கடந்த காலங்களில் இடம் பெற்ற வன்செயல்களினால், வடக்கு கிழக்கு மாகாணத்தில் 4,92,604 குடும்பங்கள் தாக்குதல்களுக்கு உட்பட்டுள்ளன என்று கணக்கிடப் பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 52,000 குடும்பங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 90,221 குடும்பங்களும், திரிகோணமலை மாவட்டத்தில் 52,000 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 32,500 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 24,252 குடும்பங்களும், யாழ் மாவட்டத்தில் 1,96,874 குடும்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 26,472 குடும்பங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 27,485 குடும்பங்களும், தாக்குதல்களுக்கு ஆளாக்கப் பட்டுள்ளனவாக, குமுகத் தொண்டு திணைக்கள மதிப்பீடு தெரிவிக்கின்றது.

—ஈழச் செய்தி மலர். (5-1-90)

Scanned with CamScanner

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு! (382)

இன்சொலால் ஈத்தளிக்க வல்லான் (387)

கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி. (390)

—அதுவும் அறிவுடையாரைப் — பெரியாரைப் போற்றிக் கொள்ளல் அரசர்க்குக் கடமை! பெருங் கடமை! கலைஞர் அக் கடமையைச் செய்து பெரியாரைப் பேணித் தமராக் கொண்டு, அழியாப் பெரும் பெயர் பெற்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லையே; என் செய்வது! அலர்மேல் அப்பாத்துரையார்க்குக் கலைஞர் இரட்டைத் தாழ்ப்பாள் போடும்படி செய்திருக்கலாம்! அவ்வாறானால் அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டுக்கும், அவர்க்-காகக் கலைஞரிடம் இரக்கம் கேட்டுத் தூது நடந்த நாம் செய்த தமிழ் உழைப்பிற்கும் என்னதான் மதிப்போ? தெரியவில்லை.

இனி, அதன் பின்னரும் எத்தனையோ பேரிடம் உதவி முயற்சிகள்! ஆனாலும் அவையெல்லாம் வெறும் நடைப் பயிற்சிகளாய்ப் போயின!

இறுதியில் இந்த முடிவுக்குத்தான் என்னால் வர முடிந்தது! அப்பாத்துரையார் என்னும் அருந் தமிழ்ப் பேரறிஞர் நம் அன்னை மொழிக் குழைத்த-வர்! ஐயமில்லை! அவர் நம் அரும்பெரும் இனத்திற்கு உழைத்தவர்! ஐயமில்லை! இப்பொழுதெல்லாம் நாம் எளிதாகச் சொல்லிச் சொல்லித் திருப்பாட்டுப் பாடுகிறோமே, அத் திராவிடப் பாடல் மரபின் ஆணிவேர் பக்கவேர்களை அறிந்து சொன்னவர். அதிலும் நமக்கு அணுவளவும் ஐயமில்லை!

அவ்வாறானால். அவர் இன்று நம்மிடையில்லை. எனவே அவருக்குச் செய்வதை அவர் குடும்பத்திற்குத் தவறாமல் செய்வோம்! உதவுங்கள்! உதவுங்கள்! உற்றுழி உதவுங்கள்! தவறாமல்! இன்று முதல்—கையில் கிடைத்த தொகையை—இன்றே கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி விட்டு, அருள் கனிந்து அச் செய்தியைத் தென்மொழிக்கு ஓர் அஞ்சல் அட்டை வழியாக, மறவாமல் தெரிவியுங்கள். தென்மொழியில் தொடர்ந்து பட்டியல் வரும்.

தென்மொழி அன்பர்கள், தமிழ்நிலம் அன்பர்-கள், உலகத் தமிழின முன்னேற்றக் கழக அன்பர்-கள் முதலியோர் மறவாமல் அனுப்ப வேண்டிக் கொள்கிறேன்.

தமிழக அரசு செய்ய விரும்பாததைத் தமிழ் அன்பர்கள் செய்யட்டும்! —**பெருஞ்சித்திரனார்.**

தொகை விடுக்க வேண்டிய முகவரி:
திருவாட்டி: அலர்மேலு அப்பாத்துரை
10, அப்பாத்துரையார் தெரு,
தேனாம்பேட்டை, சென்னை-18.

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழத்தில் போராளிகள் ஒன்றுபட வேண்-டும் என்றால், பிற போராளிக் குழுக்கள் அனைத்-தும் தங்கள் தங்கள் தன்மானம், அளவிறந்து தங்களை மதித்துக் கொள்ளும் தன்மை, இவற்றை அடியோடு விட்டு விட்டுப் பிரபாகரனிடம் கைக்-கோத்துக் கொள்ளுவதே வழி! மொத்தத்தில் தமி-ழீழ விடுதலைதான் பெரியது! அதைநோக்கித்தான் அனைத்து முயற்சிகளும், குறிப்பாக இந்திய, தமிழக அரசுகளும் கூட அவ்வாக்கமான முடிவுடன் இணைந்து — நடைபோடுவதே சரியானதாகவும் முறையானதாகவும்இருக்கும்!

பிழைத்தால் அனைவரும் ஒட்டு மொத்தமாக பிழைப்போம்! அழிந்தாலும் ஒட்டுமொத்தமாக அனைவரும் அழிவோம்! இந்தக் கோட்பாட்டிற்குப் பிரபாகரனே கீழிறங்கினாலும் அவன் மா வீரம் மழுக்கல் உடையதுதான் என்பதை வரலாறு தீர்மானிக்கும் என்பதே நமது கருத்து! O

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அரு வருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப் புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறி வியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு • 51

பொது நிலையில் உயிரீகத்தை எளிதாகக் கருதுகிற தன்மை கொள்கையின் செயல் அழுத்தத்தையும் எளிதாக மதிப்பிடச் செய்து விடும்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண் • 134.

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர் :
தனி இதழ் விலை உரு. 1-00
ஆண்டுக் கட்டணம் உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657

Scanned with CamScanner